ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வைபவம்

(ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வைகுண்டவாஸீ)

## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் அருளிச்செய்தல்

**ஸ்வாமி ப்ரஸித்த வைபவத்துடன் எழுந்தருளியிருப்பதைக் கண்டு ஸஹியாத சிலர் ஒரு ஸ்ரீவைஷ்ணவரைத் தூண்டி ஸ்வாமியினுடைய கவிதார்க்கிக ஸிம்ஹம் என்கிற பிருதை ஆக்ஷேபிக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். ஒரு நாள் ஸாயங்காலம் ஸ்ரீரங்கநாதனை மங்களாசாஸனம் செய்தருள ஸ்வாமி ஸந்நிதிக்கு எழுந்தருளிக்கொண்டிருக்கும்பொழுது அந்த ஸ்ரீவைஷ்ணவர் ஸ்வாமியை வழியில் மறித்துக்கொண்டு, தன்னுடன் வாதம் செய்யவேண்டுமென நிர்பந்தித்தார். ஸ்வாமி, "நாம் ஸித்தாந்த ஸ்தாபனார்த்தம் ஏதோ ப்ரதிவாதிகளை நிரஸித்தோமத்தனை போக்கி, ஸ்ரீவைஷ்ணவர்களுடன் வாதம் செய்ய ஒருகாலும் ஸம்மதியோம்" என்று பதில் சொல்ல, இருவரும் ஸந்நிதிக்குள் சென்றார்கள். இது இப்படி நிற்க, எம்பெருமான் "ஆழ்வார் நம்முடைய திருக்கல்யாண குணங்களை ப்ரதிபாதிக்கிறதாய்ப் பாடிய திருவாய்மொழிக்கு ப்ரத்யுபகாரமாய் ஆழ்வார் விஷயமாக ஒன்றும் செய்திலோமே? நாம் நேரில் ஆழ்வாரை ஸ்தோத்ரம் செய்ய முடியாதே? இதற்கென் செய்வது?" என்று ஸதா யோசித்துக் கொண்டிருந்தான். இப்பொழுது இவர்களுடைய ஸம்வாதத்தைக் கேட்டருளி, இதுவும் ஒரு விதி வாய்த்தது என்று கொண்டு, தம்முடைய ஸாக்ஷாத் அவதாரமான ஸ்வாமியைக் கொண்டே ஆழ்வார் திருக்கல்யாண குணங்களை ப்ரதிபாதிக்கும் ஒரு ஸ்தோத்ரம் செய்யவேண்டுமெனத் தீர்மானித்து, ஸ்வாமிக்கு ஸ்ரீஸடாரி மர்யாதை நடக்கும் காலத்தில் அதில் தாம் அநுப்ரவேசித்து, அர்ச்சகர் வழக்கம் போல் எடுக்கும்பொழுது கூட வராமல் ஸ்வாமியினுடைய திருமுடியில் ப்ரதிஷ்டிதமாயிருந்து, "நம் விஷயமாய் ஆயிரம் ச்லோகம் செய்தருளும்" என்று நியமித்தருளினார். ஸ்வாமியும் அந்த நியமனத்தைச் சிரஸாவஹித்து, அன்று இரவிலேயே ஆழ்வாருடைய விஷயமாகவும் அவர் ஸாக்ஷாத்கரித்து அருளின த்ரமிடவேதமாகிற திருவாய்மொழியின் விஷயமாகவும் ஆயிரம் ச்லோகங்கள் அடங்கியதான ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரம் (79) என்னும்** ஸ்தோத்ரத்தை அருளிச்செய்து, மறுநாள் பெரியபெருமாள் திருமுன்பே அதை விண்ணப்பம் செய்தருளினார். இப்படி

ஸ்ரீரங்கநாதனால் நியமிக்கப்பட்டு ஸ்வாமி ஒரு ஸ்தோத்ரத்தை ஸந்நிதியில் அனுஸந்திக்கிறார் என்பதை அறிந்து அனேகர் தாங்களும் கேட்டு ஆனந்திப்பதற்காக ஸந்நிதியில் வந்து கூடினார்கள். ஸ்ரீரங்கநாதனும் திருச்செவி சாற்றியருளி, திருமாலை முதலியவைகளை ப்ரஸாதித்து, "கவிதார்க்கிக ஸிம்ஹம் என்ற பிருதம் உமக்கே தகும்" என்று அருளிச்செய்தார். அங்கிருந்த பாகவதோத்தமர்கள் ஸ்வாமியின் கவிதையை **ச்லாகித்துத் தங்களுடைய சந்தோஷத்தின் ஆதிக்யத்தினால் ஸ்வாமியின் பெருமையை இன்னும் விசேஷமாகப் பஹிரங்கப்படுத்துவதற்காக அனேகம் ஸமஸ்யைகளை விண்ணப்பம் செய்ய, ஸ்வாமியும் அப்படிப்பட்ட ஆயிரம் ஸமஸ்யைகளை அங்கேயே பூர்த்தி செய்துகொடுத்தார். இது ஸமஸ்யா ஸஹஸ்ரீ (80) என்னும் ஒரு க்ரந்தமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.** ஸ்ரீபாஷ்யகாரருடைய கத்யத்ரயம், பெரியமுதலியாருடைய ஸ்ரீ சதுச்லோகீ, ஸ்தோத்ரரத்னம், இவைகளி**ன்** அர்த்தங்களில் சிற்சில வித்யாஸங்கள் **உபதேச பரம்பரையில் வந்துகொண்டிருப்பதைப் பார்த்துச் சில பெரியோர்கள் அவற்றை நிஷ்கர்ஷித்தருளும்படி ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் அப்படிச் செய்தருளுவதற்காக அவற்றிற்கு விஸ்தாரமான வ்யாக்யானமிட்டு அருளினார். இதற்கு ஸ்ரீ ரஹஸ்யரக்ஷை (81) எனத் திருநாமம்** சாற்றப்பட்டிருக்கிறது. இப்படி இங்கே எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஸ்ரீ ஸாரஸாரம் **(82) என்ற க்ரந்தத்தையும், சக்ரவர்த்தித் திருமகன் தூதுவிட்ட வ்ருத்தாந்தத்தை நிரூபிக்கிறதான ஸ்ரீ ஹம்ஸ ஸந்தேசம் (83) என்ற** க்ரந்தத்தையும் அருளிச்செய்தார்.

## ந்யாஸ விம்சதி அருளிச்செய்தல்

**இப்படி ஸ்வாமி, எல்லோரும் புகழும்படியான வைபவத்துடன் எழுந்தருளியிருக்கும்பொழுது ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை ஒருநாள் ஸ்வாமியைத் திருவீதியில் ஸந்தித்து, குசல ப்ரச்நாதிகளைச் செய்து, ஸ்வாமி செய்துவரும் அந்யாத்ருசமான ஸம்ப்ரதாய ப்ரவசனத்தைப் போர உகந்து, "எம்பெருமானார் திருவுள்ளத்தை அடியொற்றி ஸ்ரீமந் ந்யாஸ வித்யையைப் பலபடியாலும் பரவச்செய்துகொண்டிருப்பதைக் கேள்விப்பட்டேன். அவற்றையெல்லாம் ஸங்க்ரஹித்து ஸுலபமாக அனுஸந்திப்பதற்காக ஒரு க்ரந்தம் செய்தருளும்" என்று கேட்க, ப்ரபதனகலாஜன்மஜலதியான ஸ்வாமியும் அப்பொழுதே ஸ்ரீ ந்யாஸ விம்சதி (84), ஸ்ரீ ந்யாஸ விம்சதி வ்யாக்யானம் (85) என்னும் க்ரந்தங்களை** அருளிச்செய்தார்.

## சீரொன்று தூப்புல் தனியன் அவதாரம்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்
ஓரொன்று தானே அமையாதோ தாரணியில்
வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு

இப்படிப்பட்ட விசேஷ மஹிமையில் ஈடுபட்டு ஸ்ரீ பிள்ளை லோகாசார்யரும் ஸ்வாமியினிடத்தில் ஸ்ரீபாஷ்யத்தையும் ரஹஸ்யார்த்தங்களையும் அதிகரித்தார். அவர் ஸ்வாமியினுடைய ஸ்ரீஸூக்திகள் ஒவ்வொன்றும் ஸகலார்த்த ப்ரதிபாதகங்களாகவும், பூர்வாசார்யர்களினுடைய திருவுள்ளக் கருத்தின் விவரணங்களாயும் இருப்பதை அனுஸந்தித்து ஸ்வாமியின் பெருமையை நன்றாக நிரூபிக்கிற இத்தனியனை விண்ணப்பம் செய்தார்.

## சில சிஷ்யர்களுக்கு துரீயாச்ரம ஸ்வீகாரம் செய்துவைத்தல்

இப்படி ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துகொண்டிருக்கும் காலத்தில் ஸ்வாமியின் சிஷ்யர்களில் ப்ரதானர்களான பேரருளாளன் என்பவரும் இன்னும் இருவரும் ஸம்ஸாரத்தில் விரக்தியினால் ஸந்யாஸாச்ரமம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்கிற அவா தங்களுக்கு இருப்பதைத் தெரிவிக்க, ஸ்வாமியும் அதை அப்யுபகமம் செய்து, அவர்களுக்குச் சாஸ்த்ர விதிப்படி ஸந்யாஸம் செய்துவைத்தார். இவர்களில் முதலில் சொல்லப்பட்டவரான பேரருளாள ஜீயரே பின்பு ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயர் என்கிற ப்ரஸித்தமான திருநாமத்துடன் ஸ்வாமிக்குப் பிறகு இந்த ஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்திப்பித்தவர்.

## பழைய பாதரக்ஷைகளை வாசற்படியில் கட்டிவைத்தல்

ஸ்வாமியின் திருக்கல்யாண குணங்களைக் கண்டு ஸஹியாத சிலர் ஸ்வாமியை அவமானப்படுத்தவேண்டுமெனத் தீர்மானித்து ஸ்வாமி உள்ளே எழுந்தருளியிருக்கும்பொழுது ஸ்வாமி திருமாளிகையின் வாசற்படியில் சில பழைய பாதரக்ஷைகளைக் கட்டித் தொங்கவிட்டுத் தாங்கள் பக்கத்து வீட்டுத் திண்ணைகளில் மறைந்து நின்றார்கள். ஸ்வாமியும் ஏதோ கார்யமாய் வாசற்படி தாண்டிச் செல்லும்பொழுது அவைகள் தலையில் இடிக்க, ஸ்வாமி நிமிர்ந்து பழைய பாதரக்ஷைகளைப் பார்த்து பாகவதர்களின் திருவடிஸம்பந்தம் இது என்று அனுஸந்தித்துவிட்டுத் தம்முடைய கார்யார்த்தமாக வெளியில் செல்ல, பக்கத்தில் வேடிக்கை பார்க்க நின்றவர்கள் ஸ்வாமியின் திருவடியில் விழுந்து அபராத க்ஷமாபணம் செய்துவிட்டுப் போனார்கள்.

## பித்ரு ச்ராத்தத்தில் ஹயக்ரீவன் அனுக்ரஹித்தல்

**இப்படி விசேஷ வைபவத்துடன் எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஸ்வாமியின் திருத்தகப்பனாருடைய ப்ரத்யாப்திக ச்ராத்த தினம் வர, அதற்கு முதல் நாள் இரவிலே மூன்று ஸ்வாமிகளை சாஸ்த்ர விதியின்படி நிமந்த்ரித்து, மறுநாள் காலையில் தம்முடைய நித்யகர்மங்களை முடித்து ச்ராத்தத்தை உபக்ரமிப்பதற்காக நிமந்த்ர ப்ராஹ்மணர்களை ஆஹ்வானம் செய்ய அவர்கள்**

**திருமாளிகைக்குச் சென்று பார்க்க, அங்கு அவர்களைக் காணாமல், ஒருக்கால் கார்யாந்தரமாக அருகில் எங்கேயாவது போயிருக்கலாம் என்று எண்ணிக் கொஞ்சகாலம் கழித்துப் போய்ப்பார்க்க, முன்பு எம்பெருமானாருடைய மாதுகரத்தில் விஷத்தைக் கலந்துகொடுக்கச் சிலர் துணிந்ததோபாதி இப்பொழுதும் சிலர் ஏற்பட்டு ஸ்வாமி செய்தருளும் ச்ராத்தத்தைக் கெடுத்துவிட வேண்டியதற்காக அந்த நிமந்த்ரித ப்ராஹ்மணர்களுக்கு த்ரவ்யாதிகளைக் கொடுத்து அவர்களை போஜனம் செய்யும்படிச் செய்துவிடவே, அவர்கள் சில உபஹதிகளைச் சொல்லித்** தாங்கள் வரமுடியாதென்று சொல்லிவிட்டார்கள். அகாலமாய்ப் போய்விட்டபடியினால் எவ்வளவோ தேடியும் ஒருவரும் கிடைக்கவில்லை. ஸ்வாமியும் சற்றுத் தயங்கி இதற்கு என்ன செய்வது என்று யோசித்து, "நம் திருவாராதனப் பெருமாள் இருக்க நாம் ஏன் கவலைப்படவேண்டும்" என்று ஒருவாறு தேறி, அந்த ஸ்ரீ ஹயக்ரீவனையே ஆவாஹனம் செய்தருளி, ஹோமாதிகளை யதா க்ரமம் நடத்தி, வரணாதி உபசாரங்களைச் செய்து, மூன்று இலைத் தளிகைகள் சேர்த்து, அன்ன பாயஸ பக்ஷ்ய வ்யஞ்சனாதிகளைப் பரிமாறி, மந்த்ர பூர்வகமாக பரிசேஷனாதிகளைப் பண்ணிவைத்து, ஒரு திரையை ஸமர்ப்பித்து, அதற்கு வெளியில் தாம் நின்றுகொண்டு அமுது செய்தருள வேண்டும் என்று ப்ரார்த்தித்துவிட்டு, புருஷ ஸூக்தாதிகளை அனுஸந்தித்துக் கொண்டிருக்க, ஸ்வாமியின் பாவசுத்தியை உகந்தருளின ஸ்ரீ ஹயக்ரீவன் தாமே மூன்று ரூபங்களைப் பரிக்ரஹித்து, மூன்று இலைகளிலும் எழுந்தருளியிருந்து, அமுது செய்தருளும் ஓசையைக் கேட்டு, மிகவும் ஆனந்த பரவசராய், அமுது செய்யும் ஓசை முற்றிலும் அடங்கின உடனே திரையை நீக்கி, மேல் யதா க்ரமம் மந்த்ரபூர்வகமாக ஆபோசனாதிகளையும் தக்ஷிணை தாம்பூலாதிகளையும் ஸமர்ப்பித்து, ச்ராத்தத்தைப் பூர்த்திசெய்து, ஸாத்விக த்யாகம் செய்தருளி, புத்ர சிஷ்யாதிகளுடன் போஜனம் செய்துகொண்டிருந்தார். ச்ராத்தத்தைக் கெடுத்துவிட்டதாக எண்ணி ஸ்வாமியினுடைய துக்கத்தைப் பார்த்து ஆனந்திக்கலாம் என்று முன் நிமந்த்ரிதர்களானவர்களைக் கலைத்தவர்கள் ஸ்வாமியின் திருமாளிகைப் பக்கம் வந்து சேர, வாசல் திண்ணையில் அதிதேஜோவான்களான மூன்று ஸ்வாமிகள் தாம்பூல சர்வணம் செய்துகொண்டே தங்களுடைய பழைய வஸ்த்ரங்களையும் மிகுதியான தாம்பூலம் தக்ஷிணை முதலியவைகளையும் மூட்டை கட்டிக்கொண்டு நிற்பதைப் பார்த்து விஸ்மிதர்களாய், அவர்களை அணுகி அவர்களின் ஸ்ரீக்ராமம் எது என்று கேட்க, அவர்களும் ஸ்ரீதேவநாதனுடைய திருவடிவாரம் என்று பதில் சொல்லிவிட்டுப் போனார்கள். ஸ்வாமியின் ப்ரபாவாதிசயத்தைப் பார்த்து நடுங்கிப்போய் ஸ்வாமி போஜனம் செய்து வெளியே எழுந்தருளுகிற வரையில் காத்திருந்து, ஸ்வாமியின் திருவடிகளில் விழுந்து அபசார க்ஷமாபணம் செய்துகொள்ள, ஸ்வாமியும் தாம் க்ஷமிக்க வேண்டிய அம்சம் ஒன்றுமில்லை **என்றும், அவர்கள் செய்த கார்யத்தினால் ஸ்ரீ ஹயக்ரீவனுடைய திருவருளைத் தாம் பெற்றோம் என்றும் அவர்களைத் தேற்றி அனுப்பினார். இப்படி இங்கே எழுந்தருளியிருக்கிற காலத்தில் ஆழ்வார் நியமனத்தைத் தலைக்கட்டவேண்டுமெனத் திருவுள்ளம் பற்றி ஆழ்வார்களின்**

**அருளிச்செயல்களுக்கு வ்யாக்யானமாக ஸ்ரீ நிகம பரிமளம் (86) என்னும் க்ரந்தத்தையும், திருவாய்மொழியின் அர்த்தங்களை அனுஸந்திப்பதற்காக ஒவ்வொரு பாட்டின் அர்த்தத்தையும், ஒவ்வொரு தசகத்தின் அர்த்தத்தையும், ஒவ்வொரு சதகத்தின் அர்த்தத்தையும், ஸஹஸ்ரத்தையும் ஸங்க்ரஹித்து ஸ்ரீ த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளி (87), ஸ்ரீ த்ரமிடோபநிஷத் ஸாரம் (88) என்னும் க்ரந்தங்களையும் ஸ்ரீ பரமபத ஸோபானம் (89), ஸ்ரீ அபயப்ரதான ஸாரம் (90), ஸ்ரீ அஞ்ஜலி வைபவம் (91), ஸ்ரீ ப்ரதான சதகம் (92), ஸ்ரீ உபகார ஸங்க்ரஹம் (93), ஸ்ரீ ஸார ஸங்க்ரஹம் (94), ஸ்ரீ மதுரகவி ஹ்ருதயம் (95), ஸ்ரீ முனிவாஹன போகம் (96), ஸ்ரீ ஷோடசாயுத ஸ்தோத்ரம் (97) என்னும் இதர க்ரந்தங்களையும் அருளிச்செய்தார்.**

நன்றி: ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்வாமி வெளியிட்ட சந்தமிகு தமிழ்மறை.



**சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு**

**தொடரும். . .**